ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# களஆய்வின் வழி அறியப்படும் -மன்னாடி மங்களம் இராமாயண ஒயிலாட்டம்

**முனைவர் தி. சிந்தியா [1] & முனைவர் இரா ஜெயஸ்ரீ [1]**

**[1]உதவிப் பேராசிரியர் (தமிழ் )**

**சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

sindhiya@hum.sastra.edu, jayasree@sastra.edu

**ஆய்வு சுருக்கம்:**

இராமாயணம் சங்ககாலம் முதலாகவே தமிழில் செல்வாக்குப் பெற்ற இதிகாசமாகும். செவ்விலக்கியங்களில் இராமாயணச் செல்வாக்கு அமைந்திருத்தலைப் போன்றே நாட்டுப்புறக் கலை வடிவங்களிலும் (கூத்து, கும்மி, ஒயிலாட்டம், நாடகம்) தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது. தற்போது அவை அருகி வழக்கொழிந்து வருகின்றன.

இவ்வாறு நவீனப்பொழுதுபோக்கு வடிவங்களால் மெல்ல அழிவின் விளிம்பில் உள்ள நாட்டார் கலை வடிவங்களில் இராமாயணத்தின் செல்வாக்கை இனங்கண்டு ஆவணப்படுத்துதல் ஆய்வுலகிற்கு முதன்மையான ஒன்று. அவ்வகையில் சிறப்பு நோக்கில் மதுரை மாவட்டத்தில் நிகழ்த்தப்பட்டு வரும் இராமாயணம் சார்ந்த நிகழ்த்து கலை வடிவங்களை (ஒயிலாட்டம்) மீட்டுருவாக்கம் செய்தல் மற்றும் அவற்றை மீளாய்வு செய்து மக்களிடையே சென்று சேர்க்கும் நோக்கத்தில் இவ்ஆய்வு அமைகிறது.

**திறவுச் சொல் :**

இராமாயணம்,மன்னாடி மங்களம் இராமாயண ஒயிலாட்டம்,நாட்டுப்புறக் கலைகள்

**நாட்டுப்புறக் கலைகள்**

நாட்டுப்புறவியல் என்பது, நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும், நம்பிக்கைகளையும் ஆராயும் இயல் ஆகும். நாட்டுப்புறவியல்

என்பது மக்கள் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், புராணக் கதைகள் வழி பண்பாட்டை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எடுத்தியம்புகின்றன. புத்தகங்கள் படிப்பதைவிட தொழில் நுட்பங்கள் மூலம் காண்பதைவிட நாடகம், நடனம், உடல் அசைவுகள் மூலம் காட்சிகளாகக் காண்பது பல்வேறு கோணங்களில் ஆராய்வதற்கும் படிக்காத பாமர மக்கள் புரிந்து கொள்வதற்கும் பெரிதும் உதவுகின்றது.

**இராமாயண ஒயிலாட்டத்தின் வரலாறு**

இராமாயண ஒயிலாட்டமானது பல நூறு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. பல கிளைக்கதைகளை இராமாயணக் கதைப்பாடலுடன் பாடி ஆடுகின்றனர். கடவுள் வாழ்த்து முதல் சபை வணக்கம் வரை ஒரே முறையில் நிகழ்த்தப்படுவதில்லை. குலதெய்வ வழிபாடு, இராமாயணக் கதை, முருகன் பாடல், ஊரின் சிறப்பு போன்ற பல கதைகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஒயிலாட்டம் "மலைவேட நாயக்க" சாதியினரால் பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. மலைவேடர்கள் மலைகளில் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் விலங்குகளை வேட்டையாடும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மலையில் வாழ்ந்து வந்த மலைவேடர் இனத்தவர் தனது கலாச்சாரத்தைப் போற்றும் விதமாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டும் என்றால் ஒரு மிருகத்தை வேட்டையாடி அதன் பல்லை மிஞ்சியாகப் போடுவார்கள். கருகமணியைச் சுற்றி விலங்கின் பற்களைப் பின்னி கழுத்தில் அணிவார்கள். ஆண்கள் கழுத்தில் பாசி, சங்குமணி போன்றவற்றை அணிந்து கொள்வார்கள்.

திருமணம் முடிந்த பிறகு கணவன் காட்டுக்கு வேட்டையாடச் செல்லும்போது உயிரிழப்பு ஏற்பட்டால் மனைவியின் கழுத்தில் உள்ள மிருகப் பல்லை எடுத்து உரியவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். அந்த பெண் கருகமணி மாலையை மட்டும் அணிந்திருப்பாள். மறுதிருமணமும் செய்து கொள்ளலாம். இவற்றை வெட்டுக் கருகமணி என்கின்றனர். மிருகப் பல் தங்கத்துக்கு நிகரானது என எண்ணுகின்றனர்.

மலையில் வாழ்ந்த மலைவேடர் தனது குலதெய்வமாக வேப்பமரத்தை மாரியம்மனாக ஏற்று வழிபடுவார்கள். மாரி என்றால் மழை என்பார்கள். மழையும் தருவாள், மலையிலும் இருப்பாள் என்பார். இதனை,

*வேப்பரமர தோப்படியா*
*என்னேனானனே றாறா*
*என்ன வளத்த தாயே அவள்*
*என்னே னானனே*

எனப் பாடி வணங்கியுள்ளனர். பிறகு திருமலை நாயக்கரால் சமவெளிப் பகுதிக்கு வந்த மலைவேடர்களால் இந்தக் கலை எங்கும் பரப்பப்பட்டது.

மலை வேடர்களின் கலாச்சாரம் காட்டுமிராண்டித் தனமாக இருந்துள்ளது, திருமலை நாயக்கர் மலைப்பகுதியில் விலங்கினங்களால் தாக்கப்படும்போது மலைவேட இனத்தவருள் ஒருவரால் காப்பாற்றப்படுகிறார். அதன்பின் “மலைவேடர்” பற்றி அறிந்த மன்னன் மலைவேட இனத்தவரை சமவெளிப் பகுதிக்கு அழைத்து வந்து அவர்களின் கலாச்சாரம் உடை, உணவு முறை போன்றவற்றை நன்முறையில் மாற்றி அமைத்துள்ளார்.

மலைவேட இனத்தவர்களில் ஆண்கள் அனைவரையும் ஊரைச் சுற்றிப் பாதுகாப்புக்கு நிறுத்தியுள்ளார். மலையில் இருக்கும் வன விலங்குகள் விவசாய நிலத்தை நாசமாக்காமல் இருப்பதற்கும், மக்களை விலங்குகளிடமிருந்து காப்பாற்றவும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

திருமலை நாயக்க மன்னர் மலைவேட இனத்தவருக்கு “வேடநாயக்கர்” என்ற பட்டத்தை வழங்கியதாகக் கூறுகின்றனர். குடித்தலைவர்களுக்கு “கம்பளிப் பட்டம்” எனக் கொடுத்தார். பல நல்ல வாழ்வியல் கருத்துகளைக் கூறி நல்வழிபடுத்தினார். இவர்களது உணவு, உடை, கலாச்சாரம் அனைத்தும் நாகரிகமாக மாறியது.

திருமலை நாயக்கர் முன்னிலையில் இராமாயண ஒயிலாட்டமானது நிகழ்த்தப்பட்டது.

*வானே மயிலாலேகலா*
*கோபுரம் தெரியுது – அம்மா*
*மீனாட்சி கோபுரம் தெரியுது*
*யானை, கரடி, சிங்கம் வழியை மறைக்குதடா*

எனப் பல வரலாற்றுப் பாடல்களை மதுரை சார்ந்து பாடியுள்ளனர்.

மலைவேட இனத்தவர்களை கோவிலுக்குள் அனுமதிக்கமாட்டார்கள். குலதெய்வங்களை வழிபடுவதற்காக நிகழ்த்தப்பட்டது ஒயிலாட்டமாகும். மலைவேடர் கலாச்சாரத்தில் இருந்து பிறந்த இக்கலை, பிறகு அனைத்து கிராமமக்களாலும் நிகழ்த்தப்பட்டது. பல கிராமங்களிலும், ஊர்களிலும் ஒயிலாட்டம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

மதுரை மாவட்ட மன்னாடி மங்கலத்தின் “ஒயிலாட்டம்” சிறப்பு வாய்ந்தது. இராமாயணத்தில் இராமன் பிறப்பு, சூர்ப்பனகை சூழ்ச்சி, இராமன் சீதையைத்

தேடுதல், அனுமன் சிறப்பு போன்ற இராமாயணக் கதைகளைத் தெளிவான முறையில் கதைப்பாடலாக ஆட்டத்துடன் நிகழ்ததுகின்றனர்.

இராமாயண கதைப்பாடல் நிகழ்த்துவதற்கு முக்கியக் காரணம் குகன். இவன் இராமாயண கதாபாத்திரத்தில் முக்கியக் கதாபாத்திரம். மலைவேட இனத்தைச் சேர்ந்தவன் குகன். அடுத்ததாக இராமன் வனவாசம் சென்றதும் பாடலாகப் பாடி ஆடப்படுகிறது.

இராமாயண ஒயிலாட்டத்திற்கான ஒப்பனை எதுவும் செய்யப்படுவதில்லை. பல கதைப்பாடல்கள் இடம்பெறுவதால் மாவட்டம் முழுவதும் ஒரே மாதிரியான ஒயிலாட்டத்தை நடத்துகின்றனர். ஆரம்பத்தில் வெள்ளை வேஷ்டி, சட்டை, கணுக்கால் தெரியும்படி உடுத்தி தலையில் அரளிசாயப் பூத்துண்டு தலையில் கட்டி, கையில் கைக்குட்டை வைத்து, காலில் சலங்கை கட்டி ஆடுவர்.

பிறகு நவீன காலங்களுக்கு ஏற்றவாறு செருகுகால், வெள்ளை பனியன், நீல சல்லடத்தில் பாசி மணி தைத்து இடுப்பில் அணிந்து காலில் மணி கட்டி, தலையில் கொக்கு இறகு வைத்துக் கொண்டு ஆடுவர். சம்பராக்கட்டை, நையாண்டி மேளம் போன்ற இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன. ஒயிலாட்டக் கலைஞர்களுக்கு ஆட்ட வரையறை என்பது ஏதுமில்லை.

இக்கலை வழிபாட்டு முறைக்காகவும் ஆடப்படுகிறது. மழை வளம் வேண்டி, ஊர் செழிப்புடன் மக்கள் நோய் நொடியின்றி வாழ வேண்டும் என்பதற்காக. ஒயிலாட்டம் ஆடுவதற்கு முன்பு கடவுள் வாழ்த்தாக தனது குல தெய்வமான மாரியம்மன் காப்பு பாடி ஆட்டத்தைத் தொடங்குவார்கள்.

மலைவேடர், சேர்மர், பிள்ளைமார் போன்ற பல இனத்தவர்கள் தற்போது இக்கலையை நிகழ்த்துகின்றனர். மதுரை மாவட்டத்தின் பல இடங்களில் ஒயிலாட்டக் கலை பரவிக் காணப்படுகிறது. அவரவர் இனத்திற்கு ஏற்றவாறு பாடல்கள் சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. ஒரே மாதிரியான அசைவுகளைக் கொண்டு வரிசையாக இடைவெளிவிட்டு இசைக்கேற்ப மக்களைக் கவரும் விதமாக அமைகிறது.

**இராமாயண ஒயிலாட்டத்தின் அமைப்பும் பாடலும்**

**ஒயிலாட்டத்தின் தொடக்கம்**

ஒயிலாட்டத்தின் தொடக்கமாக மாரியம்மன் காப்பு பாடப்பட்டு ஆடப்படுகிறது. முதலில் மாரியம்மனைப் பாடி வழிபடுகிறார்கள். காவல் தெய்வமாக வீரனார்,

அய்யனார், காளி, மாரியம்மன் போன்ற பல சிறுதெய்வங்கள் பல கிராமங்களிலும் பல சாதியினரால் வழிபட்டு வருவது மரபாகவே உள்ளது. ஒயிலாட்டத்தை நிகழ்த்தும் மலைவேட நாயக்கர்களின் குலதெய்வமான மாரியம்மன் வழிபாட்டுப் பாடல் முதலில் பாடப்படுகிறது.

**மாரியம்மன் காப்பு (முத்தையா சாமி விருத்தம்)**

*கொஞ்சுமா மயில் மண்ணாடிமங்கலம் மேல்புறம் தணியில்*
*இருந்து குடிகளைக் காத்து நிற்கும் (பின்பாட்டு)*
*கோலகடை முத்தையா ஊர்காவல் சாமியே*
*ஐயனா உன் பாதம் மெய்யை (பின்பாட்டு)*
*மிஞ்சிமேல் மிஞ்சியும் மிருதுமேல் தண்டையும்*
*வீர வள்ள வட்டு உல்லாசமும் (பின்பாட்டு)*
*மாரில் பதைக்கமும் காதில் கடுங்கணும்*
*வைரக்கல் இட்ட முருகே (பின்பாட்டு)*
*அஞ்சாத பேய்களை அடித்து பிடித்து முன்னோர்கள்*
*ஆக்கினை செய்தது மெய்யா (பின்பாட்டு)*
*அழகு திரு மேனியை ஊர் காவல் சாமியோ*
*ஐயனோ உன் பாதம் மெய்யோ (பின்பாட்டு)*

என ஊர்க்காவல் தெய்வத்தை வழிபட்டு தொடங்குவர்.

*அழகான மன்னாடிமங்கலத்தில் புகழாய் வாழ்கின்ற*
*அம்மன் மாரித் தாயே*
*மலைமேல் மஞ்சமலை முத்தையாவை மலைக்கி*
*கீழே அணைகரை முத்தையாவை அனுதினமும் நாம் மறவோ*
*கேட்ட நல்ல வரம் கொடுக்கும் கிருவை உள்ள முத்தையாவே*
*மாலை நல்ல மனக்குதுல்லா மாரியம்மன் கோவில்லா*
*கேட்ட வரம் கொடுக்கும் கீருவையுள்ள மாரிதாயே*

என மாரியம்மனின் சிறப்பைப் பக்தி உணர்வோடு பாடல் வாயிலாக வெளிப்படுத்துகின்றனர்.

**இராமன் கதை கேட்க வரம் வேண்டுதல்**

இராமானுடைய புகழைப் பாடுவதற்கும் அவரது வனவாசம் பற்றியும் கேட்பதற்கு வரம் வேண்டுமென வேண்டிப் பாடுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் இராமனின் மீது வைத்துள்ள பக்தி புலப்படுகிறது.

*வணசிங்காரம் பார்ப்பதற்கு வரம் கொடுங்கள் மாமியாரே*

*குணம் உடன்னே எனது பக்கம் கோவலருக்கு ராமருடன்*

*கோதவரன பட்டு உடுத்தி கொண்டு வந்தம்சாதங்கிரி*

*வணசிங்காரம் பார்ப்பதற்கு வரம் கொடுங்கள் மாமியாரே.*

**மன்னாடி மங்கலத்தின் சிறப்பு**

மலைவேட இனத்தவர்கள் மலையில் இருந்து சமவெளிக்கு இடம்பெயர்ந்து பல இடங்களில் தங்கியுள்ளனர். பல கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். தங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் ஊரின் சிறப்புகளைப் போற்றி பாடுகின்றனர்.

*மயிலாடுது பாருங்க ஒரு குயிலு கூவுது கேளுங்க*

*கந்தா கந்தா என்று சொல்லி கண்ணாடி போல்*

*தோகை விரித்து*

*பழனி மலை மயிலப்பாரு (மயிலாடுது)*

*பாலர் ஆடும் ஒயிலப்பாரு (மயிலாடுது)*

*சிங்கந்தர் மலையைப்பாரு*

*சிறுவர் ஆடும் ஒயிலைப்பாரு (மயிலாடுது)*

*மன்னாடிமங்கலம் மைனர் ரெல்லாம் ஒயிலாட்டம் போடுங்க*

என்று தங்கள் ஊர்ப் பெருமையைப் பாடி ஆடுகின்றனர்.

**முடிவுரை:**

இராமாயண ஒயிலாட்டமானது பல நூறு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது.இன்றளவும் இராமாயண ஒயிலாட்டமனது சிறப்பாகவும் , வளமுடனும் கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது , இன்னும் பல நூறு தலைமுறைக்கு நமது நாட்டுப்புறக்கலைகளில் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டு வரும் இராமாயண ஒயிலாட்டம் கடத்தப்பட்டு வரும்.

**துணைநூற்பட்டியல்:**

1. மருததுரை, அரு., தமிழக நாட்டுப்புற வழிபாட்டுக் கூத்துகள், அருணா வெளியீடு, முசிறி, 1993.

2. பெருமாள், ஏ.என்., தமிழக நாட்டுப்புறக் கலைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003
3. சண்முகசுந்தரம், சு.,நாட்டுப்புற இராமாயணங்கள் கம்பன் சொல்லாத கதைகள்,காவ்யா பதிப்பகம்,சென்னை,இ.ப., 2023.
4. சிங்காரவேலன், பா.,மதுரைச் சீமை நாட்டுப்புறக் கலைகளும் கலைஞர்களும்,காவ்யா
5. பதிப்பகம்,சென்னை,மு.ப., 2014.
6. முருகேசன், கு., தமிழக நாட்டுப்புற ஆட்டக் கலைகள், தேவி பதிப்பகம்,சென்னை,1989.